www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

**H**

Reg. No.: | | | | | |

# பொது ஆயத்தத் தேர்வு – 2023

## வகுப்பு–11

காலம் : 3.00 மணி — கணினி அறிவியல் — மதிப்பெண்கள்:70

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. கீழ்வருவனவற்றுள் எது ஒரு முதன்மை நினைவகம் ஆகும்?
   a) ROM b) RAM c) Flash drive d) Hard disk
2. கீழ்க்கண்டவற்றில் எது எண்ணிலை எண் அல்ல?
   a) 786 b) 123 c) 3565 d) 7761
3. எது வேகமாக செயல்படும் நினைவகம் ஆகும்? a) வன் வட்டு
   b) முதன்மை நினைவகம் c) கேச் நினைவகம் d) புளு–ரே நினைவகம்
4. பின்வரும் இயக்க அமைப்புகளில் மொபைல் சாதனங்களை ஆதரிப்பது எது?
   a) விண்டோஸ் 7 b) லினக்ஸ் c) பாஸ் d) iOS
5. உள்ளீட்டு பண்பு மற்றும் உள்ளீடு வெளியீடு தொடர்பை ஒரு சிக்கலில் குறிப்பிடுவதை இவ்வாறு அழைக்கலாம்?
   a) விவரக்குறிப்பு b) கூற்றுகள் c) நெறிமுறை d) வரையறை
6. நிபந்தனை ....... வடிவ பெட்டியின் உள்ளே குறிப்பிடப்பட்டிருக்கும் a) வைர வடிவ பெட்டி
   b) செவ்வக பெட்டி c) நாற்கர வடிவ பெட்டி d) சிறப்பு பெட்டி
7. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் எது m, n ; = m + 2, n + 3
   a) m mod 2 b) n mod 3 c) 3 x m - 2 x n d) 2 x m - 3 x n
8. இல்லாத ஒரு கோப்பை நிரலானது திறக்க முற்படும்போது .......... பிழை ஏற்படுகிறது.
   a) இலக்கண பிழை b) சொற்றொடர் பிழை c) தருக்க பிழை d) இயக்க நேர பிழை
9. ......... ஐ மட்டுமே கொண்டிருக்கும் கூற்று வெற்று அல்லது வெறுமை கூற்று எனப்படும்.
   a) அரைப்புள்ளி b) நெளிவு அடைப்புகுறி c) காற்புள்ளி d) முக்காற்புள்ளி
10. நிரலின் செயலாக்கம் எந்த செயற்கூறிலிருந்து தொடங்கும்?
    a) isalpha ( ) b) isdigit ( ) c) main ( ) d) islower ( )
11. ஆக்கி செயற்கூறு பற்றிய பின்வரும் கூற்றுகள் சரியா தவறா எனக் கூறு.
    i) ஆக்கிகள் private பகுதியில் அறிவிக்கப்பட வேண்டும்
    ii) பொருள்கள் உருவாக்கப்படும் போது ஆக்கி தானாகவே இயக்கப்படும்
    a) சரி, சரி b) சரி, தவறு c) தவறு, சரி d) தவறு, தவறு
12. பின்வருவனவற்றுள் எது நிரலின் ஒப்பிடுகளின் எண்ணிக்கையை குறைக்கிறது?
    a) செயற்குறி பணிமிகுப்பு b) செயற்பாடு பணிமிகுப்பு
    c) செயற்கூறு பணிமிகுப்பு d) பொறுப்பு பணிமிகுப்பு
13. எந்த வரையறுப்பும் இல்லாத இனக்குழுவிற்கு நினைவக ஒதுக்கீடு எத்தனை பைட்டுகள் அளவுகள் இருக்கும்?
    a) zero b) one c) 1024 d) 700
14. இணையத்தின் மூலம் நெருக்கடி கொடுத்தல்
    a) அரண் உடைத்தல் b) சலாமி ஸ்லைசிங் c) ஏமாற்றுதல் d) இணைய தொந்தரவு
15. எந்த குறியாக்கம் மூலம் இணைய புத்தகங்கள் மதுரை திட்டத்தின் மூலம் வெளிவந்துள்ளது.
    a) ISCII b) ASCII c) TSCII d) Unicode

II. ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6 x 2 = 12

16. நினைவகத்தின் செயல்பாடு யாது?
17. ஒரு நுண் செயலியின் பண்புகளைக் குறிக்கும் காரணிகள் யாவை?
18. நெறிமுறை கட்டுமான தொகுதிகள் யாவை?
19. இயல் எண்ணின் தொடர் பெருக்கத்தை தற்சுழற்சி முறையில் வரையறுக்கவும்.
20. பின்வரும் நிரலின் வெளியீடு என்ன?

```
int year;
cin >> year;
if {year % 100 ==0}
   if {year % 400 == 0}
      cout << "Leap";
else
      cout << "Not Leap year";
```

If the input given is (i) 2000 ii) 2003

21. ஒரு கட்டுருவை உருவாக்குவதற்கான தொடரியலை எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



22. இனக்குழு மற்றும் பொருள் வேறுபடுத்து.
23. ஒரு செயற்கூறு பணி மிகுப்பின் பயன் யாது?
24. முழுவதும் தமிழில் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும் அலுவலக மென்பொருட்கள் யாவை?

**III. ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 25க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **6 x 3 = 18**

25. பின்வரும் குறியுரு இருநிலை எண்களின் கணக்கியல் செயல்பாடுகளை செய்க:
(அ) $10_{10} + 15_{10}$ (ஆ) $-12_{10} + 5_{10}$
26. இயக்க அமைப்பின் பயன்கள் ஏதேனும் மூன்று கூறு.
27. மறுசுழற்சி தொட்டியில் உள்ள ஒரு கோப்பு அல்லது கோப்புறையை எவ்வாறு மீட்டெடுப்பாய்?
28. case பகுப்பாய்வு என்றால் என்ன?
29. Break மற்றும் Continue ஒப்பிடு.
30. C++ மொழியில் உள்ள pow() செயற்கூறு பற்றி சிறுகுறிப்பு வரைக.
31. நிரலின் இயங்கு நேரத்தில் ஒரு பொருளை எவ்வாறு தொடங்கி வைப்பது என்பதை ஒரு எடுத்துக்காட்டுடன் எழுதுக.
32. இனக்குழுவை தருவிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?
33. பொதுவான நனனெறியின் பிரச்சனைகள் ஏதேனும் ஆறினைக் குறிப்பிடு.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5 x 5 = 25**

34. பின்வருவனவற்றை விளக்கு. 1) மைபீச்சு அச்சுப்பொறி 2) பல்லூடக பட வீழ்த்தி 3) பட்டை குறியீடு/QR குறியீடு படிப்பான் **(அல்லது)**
ROM ன் வகைகளைப் பற்றி விளக்கமாக எழுது.
35. நெறிமுறை வடிவமைப்பதற்கான சில அடிப்படை கோட்பாடுகள் மற்றும் தொழில் நுட்பங்கள் யாவை? **(அல்லது)**
கீழே கொடுக்கப்பட்டுள்ள A, B மற்றும் C மாறிகளின் மதிப்புகளை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு சுழற்சியாக மாற்றும் விவரக் குறிப்பு மற்றும் நெறிமுறையை கட்டமைக்கவும். அம்புக்குறியிடப்பட்டுள்ளபடி B மாறிக்கான மதிப்பு A மாறியிலிருந்தும், C மாறிக்கான மதிப்பு B மாறியிலிருந்தும், A மாறிக்கான மதிப்பு C மாறியிலிருந்தும் பெறப்படும்.




36. C++ல் பயன்படுத்தப்படும் இருநிலை செயற்குறிகளை பற்றி எழுதுக. **(அல்லது)**
மாறியின் வரையெல்லை விதி முறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
37. பொருள் நோக்கு நிரலாக்கம் மற்றும் நடைமுறை நிரலாக்கம் வேறுபடுத்துக. **(அல்லது)**
பின்வரும் சி++ நிரலின் வெளியீட்டை எழுதுக.

```
#include<iostream>
using namespace std;
class data
{
    int i, j;
    public;
        int k;
        data ( )
        {
            cout<<"Non paramaterized constructor\n";
            i = 0;
            j = 0;
        }
        Data (int a, int b)
        {
            cout<<"Parametrerized constructor\n";
            i = a;
            j = b;
        }
        Data(Data&a)
        {
            cout<<"Copy construcor \n";
            i=a.i;
            j=b.j;
        }
        void display ( )
        {
            cout<<i<<'\t'<<j<<'\n';
        } };
int main ( )
{
    Data d1, d2 (10,20), d3 (d2);
    d1.display ( );
    d2.display ( )
    d3.display ( );
    return 0;
}
```

38. பல்வேறு காண்பு நிலைப்பாங்கினை வரைபடத்தைக் கொண்டு விளக்குக. **(அல்லது)**
களவாடல் என்றால் என்ன? களவாடலின் வகைகள் யாவை? மேலும் அதை எவ்வாறு தடுக்கலாம்?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com